இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 15.04.2026

# தொகுதி எண்ணிக்கையில் பாகுபாடு!

மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு மசோதாவைக் கேடயமாகப் பயன்படுத்தி நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டம் தீட்டியுள்ளது பாஜக. தொகுதிகளை அதிகரித்தால் தென் மாநிலங்கள் கடும் பாதிப்பை சந்திக்கும் என்று தொடர்ந்து தென் மாநிலங்கள் கூறி வருகின்றன. அதனை மீறித்தான் இதனைச் செய்யப் போகிறார்கள்.

நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை இப்போது 543 ஆக இருக்கிறது. இதனை 816 ஆக அதிகரிக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த இடங்கள் அதிகரிப்பு 2029 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இருந்து நடைமுறைக்கு வரலாம்.

**வெளியில் தெரியவந்துள்ள பட்டியல் படி தற்போது பாஜக ஆட்சியில் உள்ள வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை 420 ஆக உயரும். அதே நேரத்தில் தென் மாநிலங்கள், மேற்கு வங்கம், ஜார்கண்ட் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 275 ஆக மட்டுமே உயரும்.**

**வட மாநிலங்களை வைத்தே தொடர்ந்து ஆட்சியில் இருந்துவிடலாம், தென் மாநிலங்களின் தயவு தேவையில்லை என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.**

மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து இதனைச் செய்கிறார்கள். 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் மட்டும் சேர்ந்து 48.6 விழுக்காடு இருக்கிறார்கள். அதாவது இந்திய மக்கள் தொகையில் பாதியை இந்த ஐந்து மாநிலங்கள் வைத்துள்ளன. இந்த மாநிலங்களுக்கு அதிகமான இருக்கைகள் கிடைக்கும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் உறுப்பினர் எண்ணிக்கை முன்பு சொன்ன ஐந்து மாநிலங்களைப் போல அதிகரிக்காது.

தொகுதி மறுவரையறைச் சதியை முன்கூட்டியே, தொடக்கத்தில் இருந்து எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம். தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தையே மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டினார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகள் கூட்டத்தையும் கூட்டினார்கள்.

**“மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒருமனதாகக் கடுமையாக எதிர்க்கிறது. 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று 2000வது ஆண்டில் அன்றைய பிரதமர் உறுதி அளித்தவாறே, தற்போதும் இந்த வரையறை 2026ல் இருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று பிரதமர் நாடாளுமன்றத்தில் உறுதி அளிக்க வேண்டும். அரசமைப்பு சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.**

**நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில், 1971ஆம்ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கு இடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்” என்று அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதாக இருந்தால் தற்போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கு இடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை இருக்கிறதோ, அதே விகிதத்தில் உயர்த்த வேண்டும். ஆனால் அதிலும் பாகுபாடு காட்டி உயர்த்தப் போகிறார்கள்.**

அதனால் தான், “இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையானது பா.ஜ.க. ஆதிக்கம் செலுத்தும் வட மாநிலங்களுக்கு ஆதரவாக வலுவூட்டி, தென்மாநிலங்களின் குரலை நெரிக்கும். வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இரு மடங்காகும் அதேவேளையில் தென் மாநிலங்களின் அளவு 24 விழுக்காட்டிலேயே தேங்கி நிற்கிறது. இது மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் தெலங்கானா போன்ற மாநிலங்களைத் தண்டிப்பதாகும்.

இந்த நடவடிக்கையால் கூட்டாட்சி சிதைக்கப்பட்டு, அதிகாரம் ஒருசில பகுதிகளில் மட்டுமே குவிக்கப்படும்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி ஆகிய தென் மாநில முதலமைச்சர்களும் இதனை மிகக் கடுமையாக எதிர்த்துள்ளார்கள்.

பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை இப்போதுள்ள தொகுதி அளவிலேயே வழங்க வேண்டியது தானே?

பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டிலும் பாஜக நாடகம் தான் ஆடியது. மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றி விட்டதாக பாஜக சொல்லிக் கொள்கிறது. அந்த சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால்,

மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு அதனடிப்படையில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவோம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும், அதனடிப்படையில் தொகுதி மறுவரையறையையும் இவர்கள் செய்யப் போகிறார்கள் என்பது தெளிவாகி விட்டது. இவை இரண்டையும் செய்யவே பத்து ஆண்டுகள் ஆகும். அதன்பிறகு தான் 33 விழுக்காடு இடஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால் அதனைக் காரணமாக வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வட மாநிலங்களில் அதிகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

இன்று உத்திரப் பிரதேச மாநிலத்துக்கு 80 தொகுதிகள் இருக்கிறது. அந்த எண்ணிக்கை 120 ஆகப் போகிறது. உத்திரப் பிரதேசத்தையும் சுற்றி இருக்கும் எட்டு வட மாநிலங்களையும் மட்டும் கைப்பற்றினால் போதும் நிரந்தரமாக ஆட்சியில் இருந்து விடலாம் என்று கணக்குப் போடுகிறார்கள்.தென் மாநிலங்களின் தயவு தேவையில்லை. இதுதான் தொகுதி மறுவரையறைக்குப் பின்னால் இருக்கும் சதிச் செயல் ஆகும்.

தென்னிந்திய மக்களின் தயவு இல்லாமல் ஆட்சி அமைக்கும் வகையில் இந்த சதியைச் செய்கிறார்கள். இது வடக்கு தெற்கு பிளவு அதிகரிக்கவே செய்யும்.

## நெல்லுக்கு ஊக்கத் தொகை விவகாரம்:

# கடிதத்தை பொதுவெளியில் வெளியிடத் தயாரா?

## ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, ஏப். 15 -

நெல்லுக்கு ஊக்கத் தொகை அளிக்கும் விவகாரத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றி இருந்தார்.

அதற்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டார்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவரது கடிதத்தை பொதுவெளியில் வெளியிடத் தயாரா? என கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்களே,**

**“நெல்லுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத்தொகையால் விளைச்சல் பெருகிக் கொண்டே போகிறது. எனவே, இந்த ஊக்கத் தொகையை நிறுத்த வேண்டும்” எனத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளருக்குத் தங்களின் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் மிகத் தெளிவாகவே உள்ளது.**

**கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை. அப்படி, பேசவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.**

**எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில், தற்போது மாநில அரசால் தரப்படும் ஊக்கத்தொகையை மறுபரிசீலனை செய்யுமாறும், நெல்லுக்கு இத்தகைய ஊக்கத்தொகை வழங்குவதை நிறுத்துவது தொடர்பாகப் பரிசீலனை செய்யவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.**

**தங்களுடைய இந்தப் பதிவில், “குறைந்தபட்ச ஆதார விலையைத் தாண்டி ஊக்கத்தொகை வழங்குவது மாநில அரசின் முடிவு எனவும், அதனை யாரும் பறிக்கவில்லை” என்றும் கூறியிருக்கிறீர்கள்.**

**தங்களது கூற்று உண்மைதானென்றால், அந்தக் கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தாங்கள் தயாரா?**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## நெல் கொள்முதலுக்கான ஊக்கத் தொகையை நிறுத்துமாறு

## ஒன்றிய அரசு – தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிய குற்றச்சாட்டு நிரூபணம்!

## ஆதாரத்துடன் வலைதளத்தில் பதிவிட்டார் முதல்வர்!


**சென்னை, ஏப். 15 -**

**நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்துமாறு ஒன்றிய அரசு கடிதம் எழுதியிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளது.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு வழங்கும் நெல் ஊக்கத்தொகையை நிறுத்தச் சொல்லி ஒன்றிய நிதி அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது, இது தமிழ்நாடு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் செயல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குற்றம்சாட்டியிருந்தார்கள்.

நெல் சாகுபடி ஊக்கத் தொகை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் தவறானவை என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். இதற்குப் பதிலடி கொடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை, அப்படிப் பேசவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை” என்றும் தெரிவித்தார்.



वी. वुअलनाम आई.ए.एस.
सचिव (व्यय)
V. Vualnam I.A.S.
Secretary (Expenditure)

भारत सरकार
वित्त मंत्रालय
व्यय विभाग
Government of India
Ministry of Finance
Department of Expenditure

D.O.F.No. 38(01)/PFC-I/2025 — 09th January 2026

*Dear Shri N. Muruganandam,*

As you are aware, the Government of India announces the Minimum Support Price (MSP) for various crops every year to ensure remunerative prices for farmers and to prevent distress sales.

2. In recent years, bumper production of wheat and paddy has resulted in wheat and rice stocks far in excess of requirements for the Public Distribution System, buffer norms, and other welfare and contingency needs. The surplus continues to rise year after year, creating a significant and recurring burden on the public exchequer.

3. The announcement of additional bonus on paddy and wheat (over and above MSP) by some State Governments, including the Government of Tamil Nadu, will cause higher sowing and production of these foodgrains.

4. Wheat and paddy are comparatively water, fertilizer and input intensive crops and their disproportionate cultivation exacerbates groundwater depletion, soil degradation, biodiversity loss and stubble burning. These outcomes have serious implications for sustainability, climate resilience and public health. At the same time, inadequate domestic production of oilseeds and pulses compels higher imports.

5. In view of the above, I request you to review the existing bonus policy of the State Government and consider discontinuing the bonus on wheat and paddy. It is requested that attention be shifted towards incentives to promote pulses, oilseeds and millets, in line with national priorities for nutrition security, Atmanirbharta and sustainable agriculture.

*With warm regards,*

Yours sincerely,

(V. Vualnam)

Shri N. Muruganandam, IAS
Chief Secretary
Govt. of Tamil Nadu Secretariat,
Chennai – 600009

**தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசின் கடிதம்!**

இந்நிலையில், ஒன்றிய நிதி அமைச்சகம், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதம் தற்போது வெளியாகி உள்ளது. அதில், நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்துமாறு தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

நெல் சாகுபடிக்கு தண்ணீர், உரம் போன்றவை அதிகம் தேவைப்படும் என்றும், இதனால், நிலத்தடி நீர்மட்டம், மண் வளம் பாதிக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்துமாறு ஒன்றிய அரசு கடிதம் எழுதியிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு நிரூபணமாகி உள்ளது.

இது தொடர்பாக கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட வலை தளப் பதிவு வருமாறு:

**மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களே,**

**தாங்கள் சொல்லியது உண்மையாக இருந்தால் கடிதத்தை வெளியிட்டிருந்தாலே போதும். மக்கள் படித்து உண்மையை அறிந்துகொண்டிருப்பார்கள். அதற்கு, இவ்வளவு நீளமான பொழிப்புரை எழுதி, கடிதத்தை வெளியிட்டதிலேயே தங்களின் குட்டு அம்பலமாகிவிட்டது.**

**மேலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநில அரசுகளும், நெல்லுக்கு ஊக்கத் தொகை தரவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தாங்கள் தெரிவித்திருப்பதும் உண்மைக்குப் புறம்பானது.**

**கடந்த பிப்ரவரி மாதம், மாண்புமிகு கேரள முதலமைச்சர் தோழர் பினராயி விஜயன் அவர்கள் இது குறித்து வெளியிட்ட பதிவே இதற்குச் சாட்சி!**

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் முனைவர். பி.பழனியப்பனை ஆதரித்து,திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். கூட்டத்தில் தி.மு.க., திராவிடர் கழகத்தினர் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.